[සියලු ම හිමිකම් ඇවිරිණි]
[முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்



EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2020

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2020

வினாத்தாள் இல. 1

வினாத்தாள் I

45 நிமிடம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் **மீது** எழுதுக.
* **முன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரிபாகும்.	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க


www.ikedu.lk



LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

● 1, 2 ஆகிய வினாக்களில் உள்ள அடைப்புகளில் இருக்கும் கூட்டத்துடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.


1. 


(1) 
(2) 
(3) 

2. 

(1) 
(2) 
(3) 


● 3, 4 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து விடை தருக.


3. 
உரு A


உரு B

A, B ஆகிய இரு உருக்களுக்குமிடையே எத்தனை வேறுபாடுகள் உள்ளன?

(1) 1 (2) 2 (3) 3

4. 
உரு C


உரு D

C, D ஆகிய இரு உருக்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகளின் எண்ணிக்கை

(1) நான்கிலும் குறைவாகும் (2) நான்காகும் (3) நான்கிலும் கூடவாகும்

5. கீழே தரப்பட்டுள்ள கோலம் தொடர்ந்து செல்லும்போது ஆறாம் இடத்தில் வரத்தக்க குற்றுகளின் எண்ணிக்கையைத் தெரிவுசெய்க.




(1) 15 (2) 21 (3) 28

www.ikeau.lk

சுட்டெண் :.....

6. கீழேயுள்ள உருக்கள் ஒவ்வொன்றிலும் நான்கு ஈர்க்குகள் உள்ளன. அவற்றின் முழு நீளத்தையும் அதே விதத்தில் பயன்படுத்தி ஒரு செவ்வகத்தை அமைக்கத்தக்க ஈர்க்குகள் உள்ள உரு யாது?



(1) (2) (3)


7. இவ்வினாத்தாளில் முதற் பக்கத்தில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்பச் சரியான கூற்று யாது?

(1) இவ்வினாத்தாளில் 30 வினாக்கள் உள்ள அதே வேளை செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

(2) இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ள அதே வேளை செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

(3) இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ள அதே வேளை செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

8. ஒரு புத்தகத்தின் இரு பக்கங்களில் எழுத்துகள் ஒரு குறித்த விதத்தில் இருப்பதை உரு காட்டுகிறது. அதனை இனங்கண்டு அதே விதத்தில் எழுத்துகள் இருக்கும் பக்கங்களைக் காட்டும் உருவைத் தெரிவுசெய்க.



(1) (2) (3)

9. பின்வரும் நிகழ்வுடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவுசெய்க.

நிகழ்வு : பணம் இல்லாது கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த எனக்கு நண்பன் ஒருவன் தன்னிடமிருந்த பணத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தான்.

(1) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

(2) உண்ணாச்சொத்து மண்ணாய்ப் போகும்.

(3) அன்பான நண்பனை ஆபத்தில் அறி.

● பலமுறை திருத்தி வரைந்தால்தான் - பாங்காய் ஓவியம் உருவாகும்!
பலமுறை பாடிப் பார்த்தால்தான் - பண்ணுடன் குரலும் வளமாகும்!
பலமுறை நடந்து பார்த்தால்தான் - பாதை புதிதாய் உருவாகும்!
பலமுறை ஓடிப் பார்த்தால்தான் - பந்தயப் பரிசு கைகூடும்!

10. இக்கவிதை தரும் முழுமையான செய்தி யாது?

(1) சோம்பலை அகற்றிடுக.

(2) கடுமையாக வேலை செய்திடுக.

(3) வெற்றி பெறுவதற்கு முயற்சிக்குக.

11. அப்துல்லா வீதியில் செல்லும்போது பார்வை இழந்த முதியவர் வெள்ளைப் பிரம்புடன் வீதியோரம் நிற்பதைக் கண்டான். அப்துல்லா செய்யக்கூடியது யாது?

(1) கவனியாது செல்லல்.

(2) வீதியைக் கடந்து செல்ல அவருக்கு உதவி செய்தல்.

(3) முதியவரைப் பார்த்து நகைத்துச் செல்லல்.

● கதை ஒன்றின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. அதிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்கள் இடம்பெறும் பகுதியைத் தெரிவுசெய்க.

12. அது ஒரு கோடை காலம். ஒரு காகம் தாகத்தால் தண்ணீர் தேடி அங்குமிங்கும் அலைந்து திரிந்தது. ஒரு வீட்டின் அருகே ..... இருப்பதைக் கண்டது. அது விரைந்து சென்று அதனுள் எட்டிப் பார்த்தது. அதன் ..... சிறிதளவு நீரே இருந்தது. உடனே அது கீழே கிடந்த சிறிய கற்களை எடுத்துக் குடத்தினுள் ..... தண்ணீர் மேலே வந்ததும் தாகந் தீர அருந்தி விட்டுப் பறந்து சென்றது.

(1) ஒரு குடம் அடியில் போட்டது

(2) ஓர் குடம் ஓரத்தில் போட்டது

(3) ஒரு குடத்தில் அடியில் எறிந்தது

● பின்வரும் அட்டவணையைப் பார்க்க.

	முதலாம் நிரல்	இரண்டாம் நிரல்	மூன்றாம் நிரல்
முதலாம் நிரை →	△	⊕	★
இரண்டாம் நிரை →	@	#	□
மூன்றாம் நிரை →	✺	β	✤

கீழேயுள்ள படிமுறை 1 இலும் படிமுறை 2 இலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அட்டவணை மாற்றப்படுகின்றது. அதனைப் பயன்படுத்தி **13, 14** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

படிமுறை 1 - முதலாம் நிரை இருக்கும் இடத்திற்கு இரண்டாம் நிரையையும் இரண்டாம் நிரை இருந்த இடத்திற்கு முதலாம் நிரையையும் மாற்றல்

படிமுறை 2 - இரண்டாம் நிரல் இருக்கும் இடத்திற்கு மூன்றாம் நிரலையும் மூன்றாம் நிரல் இருந்த இடத்திற்கு இரண்டாம் நிரலையும் மாற்றல்


13. மாற்றங்களைச் செய்ததன் பின்னர் அட்டவணையின் நடு அடைப்பில் இருக்கும் உரு யாது?

(1) ⊕ (2) □ (3) ★

14. ஆரம்பத்தில் இருந்த அட்டவணையில் உரு ✤ இருந்த இடத்திற்கு மாற்றங்களைச் செய்த பின்னர் வரும் உரு யாது?

(1) β (2) ✺ (3) □

15. உருவில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க.




(1) (2) (3)

[பக். 5 ஐப் பார்க்க

www.ikeou.lk

16. பின்வரும் உருவில் உள்ள எண் கோலத்திற்கேற்ப அடைப்பு ? உடன் பொருந்தும் எண்ணைத் தெரிவுசெய்க.




(1) 20 (2) 21 (3) 22

17. குறியீடு ● இரு தடவைகளும் குறியீடு □ ஐ ஒரு தடவையும் பயன்படுத்தி எண் 232 எழுதப்பட்டிருந்தது. 232 உடன் 100 இணைக் கூட்டும்போது கிடைக்கும் எண்ணைக் காட்டும் விடை யாது?

(1) ●●□ (2) □●□ (3) □□●


● **18, 19** ஆகிய வினாக்களில் இருக்கும் வெற்று அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.

18.



(1)  (2)  (3)

19.



(1)  (2)  (3) 

20. சங்கர் ஓர் ஏணியின் ஐந்தாம் படியின் மீது நிற்கிறான். மேலும் மூன்று படிகள் ஏறும்போது அவன் ஏணியின் நடுவில் உள்ள படியை வந்து சேருவான். ஏணியில் உள்ள படிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 10 (2) 13 (3) 15

21. எனக்கு வயது 6 வருடங்களாக இருந்தபோது எனது சகோதரனின் வயது எனது வயதின் அரைவாசியாக இருந்தது. எனக்கு இப்போது வயது 12 வருடங்கள் ஆகும். எனது சகோதரனின் தற்போதைய வயது யாது?

(1) 8 (2) 9 (3) 10

22. ஒரு பேருந்தில் சென்ற மாணவன் ஒருவன், தனது பயணச் சீட்டுக்காக நடத்துநரிடம் ரூ. 20 ஐ வழங்கிய போது நடத்துநர் அம்மாணவனிடம் மேலும் ரூ. 1 ஐப் பெற்று, ரூ. 10 ஐ மீதியாகக் கொடுத்தார். பேருந்துக் கட்டணம் எவ்வளவு?


(1) ரூ. 10 (2) ரூ. 11 (3) ரூ. 12

23. ஒரு கடிகாரத்தின் மணித்தியால முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையே உள்ள கோணம் ஒரு செங்கோணத்திலும் பார்க்கக் கூடியதாக இருக்கும் சந்தர்ப்பம் பின்வரும் எந்நேரத்தில் காட்டப்படுகிறது?

(1) 9.30 (2) 12.15 (3) 3.00


[பக். 6 ஐப் பார்க்க

www.lkedu.lk

24. 

இவ்வுருவில் காணத்தக்க முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

(1) 6 (2) 11 (3) 13

25. 

இந்த உருவில் காட்டப்பட்டுள்ள கனவுருவின் ஆறு பக்கங்களினதும் பரப்பளவு எத்தனை சதுர சென்றிமீற்றர்?

(1) 28 (2) 40 (3) 52

26. பின்வரும் உருக்களில் உள்ள விளக்குகளைப் பார்க்க.



இவ்விளக்குகளை ஒரு குறித்த இயல்பு தொடர்பாக ஒழுங்குபடுத்தி வைத்தால் கிடைக்கத்தக்க விடை யாது?


(1) C, A, D, B (2) B, A, D, C (3) D, C, B, A

27. HAREN, KISHAN, TUAN என்ற மூன்று பெயர்கள் முறையே ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக இலக்கங்களை இட்டு பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. 23516, 894236, 7036 எனின், SRIKANTH என்ற பெயர் சரியாக எழுதப்பட்டுள்ள விடை யாது?

(1) 45983672 (2) 45983276 (3) 45936872

28. வாகனத் தரிப்பிடம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கார்களினதும் முச்சக்கரவண்டிகளினதும் மொத்த எண்ணிக்கை 13 ஆகும். அவற்றின் சில்லுகளின் மொத்த எண்ணிக்கை 45 ஆகும். வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முச்சக்கரவண்டிகளின் எண்ணிக்கை எத்தனை?

(1) 5 (2) 6 (3) 7

29. 

உருவில் காட்டப்பட்டுள்ள தராசு சமநிலையில் உள்ளது. அதற்கேற்ப ■▲ இற்குச் சமன்

(1) ▲▲ (2) ▲●● (3) ▲■●


30. ஒரு நிரையில் பெண் பிள்ளைகள் வரிசையாக நின்றனர். ஒரு பக்கத்திலிருந்து கணக்கிடும்போது சங்கரி 12 ஆவதாக நின்றாள். மறு பக்கத்திலிருந்து கணக்கிடும்போது அவள் 5 ஆவதாக நின்றாள். நிரையில் எத்தனை பெண் பிள்ளைகள் நிற்கின்றனர்?

(1) 15 (2) 16 (3) 17


[பக். 7 ஐப் பார்க்க

www.lkedu.lk

31. பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண் யாது?



(1) 25 (2) 49 (3) 64

32. 

உருவில் ஒத்த மரக் குற்றிகள் சிலவற்றைப் பயன்படுத்தி உருவாக்கிய அமைப்பு காட்டப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள மரக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?

(1) 9 (2) 12 (3) 14

33. ஒரு குடும்பத்தின் இளையவர் பின்வருமாறு கூறுகின்றார். "எனக்கு சகோதரர்களும் சகோதரிகளும் சம எண்ணிக்கையில் உள்ளனர்." அக்குடும்பத்தின் மூத்தவர் பின்வருமாறு கூறுகின்றார். "எனக்கு உள்ள சகோதரிகளின் எண்ணிக்கை சகோதரர்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும்." அக்குடும்பத்தில் உள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையும் யாவை?

(1) ஆண் பிள்ளைகள் 2 உம் பெண் பிள்ளைகள் 2 உம்

(2) ஆண் பிள்ளைகள் 3 உம் பெண் பிள்ளைகள் 2 உம்

(3) ஆண் பிள்ளைகள் 3 உம் பெண் பிள்ளைகள் 4 உம்


34. அருண், சிவா, அமீர் ஆகிய பிள்ளைகள் தொலைக்காட்சியைப் பார்க்க விரும்புவர். அமீர், அருண், முரளி ஆகிய பிள்ளைகள் கதைப்புத்தகம் வாசிக்க விரும்புவர். சிவா, அருண், ரவி ஆகிய பிள்ளைகள் முத்திரை சேகரிக்க விரும்புவர். இரண்டு பொழுதுபோக்குகளில் மாத்திரம் ஈடுபடுவதற்கு விருப்பமுடைய பிள்ளைகள் யாவர்?

(1) அருண், முரளி ஆகியோர்

(2) சிவா, அமீர் ஆகியோர்

(3) முரளி, ரவி ஆகியோர்

35. விலங்குகள், பறவைகள், கொக்கு, புலி ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்புடைமை பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.



○ இன் மூலம் வகைகுறிக்கப்படுவது

(1) புலி (2) கொக்கு (3) பறவைகள்

36. 69 தொடக்கம் 99 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும்போது இலக்கம் 9 ஐ எழுத வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 10 (2) 13 (3) 14

[பக். 8 ஐப் பார்க்க

www.ikeon.lk

37. ஒரு பிள்ளை காலையில் எழுந்து பாடசாலை செல்வதற்குப் புறப்படும் வரை செய்து முடிக்க வேண்டிய கருமங்கள் பல உள்ளன. அவற்றுள் முதலில் செய்ய வேண்டிய கருமமும் இறுதியில் செய்ய வேண்டிய கருமமும் கீழே தரப்பட்டுள்ளன.

(A) நித்திரை விட்டெழுதல்

(B) .....

(C) .....

(D) .....

(E) வீட்டிலிருந்து புறப்படுதல்


இக்கருமங்களின் சரியான ஒழுங்குமுறையைக் காட்டுவதற்கு B, C, D ஆகிய சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான கருமங்களைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) (B) உடை அணிதல், (C) முகம் கழுவுதல், (D) உணவு உண்ணல்

(2) (B) உணவு உண்ணல், (C) முகம் கழுவுதல், (D) உடை அணிதல்,


(3) (B) முகம் கழுவுதல், (C) உடை அணிதல், (D) உணவு உண்ணல்

38. பின்வரும் உருவில் அட்டைத்தாளினால் செய்யப்பட்ட ஒரு சதுரமுகி உள்ளது. அது விரிக்கப்படும்போது தோற்றும் விதம் யாது?



(1) (2) (3)

● ஓர் அடைப்பின் ஒரு பக்கத்தின் நீளம் 10 மீற்றர் ஆக இருக்குமாறு வரையப்பட்டுள்ள ஒரு பாதை நெய்யரி கீழே காணப்படுகின்றது. அதனைக் கொண்டு **39, 40** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



39. மேற்குறித்த பாதை நெய்யரியில் K இலிருந்து D இனூடாக B வரையுள்ள மிகக் குறுகிய தூரம் எத்தனை மீற்றர் ஆகும்?

(1) 50 (2) 80 (3) 100

40. மேற்குறித்த பாதை நெய்யரியில் சாருமதி A இலிருந்து K இனூடாக E இற்கும் கண்ணன் E இலிருந்து C இனூடாக A இற்கும் பயணஞ் செய்தனர். இதற்கேற்ப,

(1) சாருமதியும் கண்ணனும் சம தூரத்திற்கு பயணஞ் செய்துள்ளனர்.

(2) கண்ணன் சாருமதியிலும் கூடுதலான தூரம் பயணஞ் செய்துள்ளான்.


(3) இருவரும் பயணஞ் செய்துள்ள மொத்தத் தூரம் 190 மீற்றர் ஆகும்.

* * *

www.ikedu.lk

பிரதி ம் சிங்கள மொழிபெயர்ப்பு]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்



EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2020

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2020

வினாத்தாள் இல. 1

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **முன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்து பார்ப்பதற்காகத் தாளொன்று வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பிட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.ikeduk.lk

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

காலைக் கதிரவன் தன் கடமை உணர்வோடு கிழக்கு வானிலே செம்மஞ்சள் நிறப் பந்துபோல மெதுவாக மேலெழுகிறான். சேவல்களும் கரைந்து சத்தமிடும் காகங்களும் விடியலை அறிவித்து, கதிரவனை வரவேற்கின்றன. கூட்டங் கூட்டமாகப் பறந்து திரியும் பட்சிகளின் இனிய கானம் சூழலை இனிமையாக்குகின்றது. கதிரவனின் பொற்கரம் பட்டதும் இலைகளின் நடுவே இரத்தினக் கற்களாக மின்னிய பனித்துளிகள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின.

● பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) செம்மஞ்சள் நிறப் பந்து எனக் குறிப்பிடப்பட்டிருப்பது எது? .....

(ii) அடுக்குத் தொடர் ஒன்றினைத் தருக. .....

(iii) 'பறவைகள்' என்பதற்கு ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. .....

(iv) இலைகளின் நடுவே மின்னிய பனித்துளிகள் எவ்வாறு காட்சியளித்தன?

.....

(v) கதிரவனை வரவேற்று விடியலை அறிவிக்கும் பறவைகள் எவை?

.....

(vi) இப்பந்திக்கு மிகவும் பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(அ) கதிரவனின் அழகு

(ஆ) காலைக் காட்சி

(இ) கானம் இசைக்கும் பறவைகள்

2. உயர்திணை, ஒருமை, ஆண்பால், பெயர்ச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

மக்கள் ஆண்கள் சிங்கம் அரசன் கவிஞர்

3. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

கண்ணையும் / சிற்பங்கள் / அழகு / கருத்தையும் / வாய்ந்தவை / கவரும்

.....

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் '✓' எனவும் பிழையாயின் '✗' எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.

(i) எறும்புகள் தேவையான உணவுகளைச் சேகரித்து வைத்தன. (.....)

(ii) அவை ஓர் அழகான மலைத் தொடர். (.....)

(iii) வானில் பறவைகள் பறந்து சென்றன. (.....)

(iv) ஆசிரியர் கூறிய அறிவுரைகள் மனதில் பதிந்துள்ளது. (.....)

5. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

(i) காலையில் எழுந்தவுடன் செய்ய வேண்டியவை யாவை

(ii) தோட்டத்தில் சிவப்பு மஞ்சள் வெள்ளை நிற மலர்கள் காணப்படுகின்றன

6. பின்வரும் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான பழமொழிகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) விடாமுயற்சியாற் பயன் உண்டு.

.....

(ii) அதிக ஆசை அழிவைத் தரும்.

.....

[பக். 3 ஐப் பார்க்க

www.lkedu.lk

கூட்டெண் :.....

7. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.

(i) உன்ரை பேர் என்ன?

.....

(ii) நாங்கள் வீட்டை போட்டு வாறம்.

.....

8. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து **புள்ளிக்கோட்டில்** எழுதுக.

(i) இயற்கை தந்த கொடையான ..... (மரங்களை / மறங்களை) நாம் அழிக்கக்கூடாது.

(ii) ஆதர் சி. கிளாக் வானியல் தொடர்பான ..... யில் (ஆராட்சி / ஆராய்ச்சி) ஈடுபட்டார்.

9. பின்வரும் வாக்கியத்தை இறந்த காலத்தில் எழுதுக.

அவர்கள் வயலில் வேலை செய்கின்றனர்.

.....


10. எதிர்ச்சொல்லை எழுதுக.

ஆக்கம் : .....

11. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Vegetable : ..... (ii) Nose : .....

12. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை, ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

(ii) 

....

13 பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(i) live / I / Colombo / in : .....

(ii) is / father / my / This : .....

14. 'பத் கன்ன' எனும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

.....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

எனக்குத் தண்ணீர் வேண்டாம். : .....

16. 'பத்தாயிரத்து நூற்றுப் பன்னிரண்டு' எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக. : .....

17.

5	6
3	9

கட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.


: .....

www.ikedu.lk

18. பின்வரும் எண்களுள் ஒன்றினிடத்து இலக்கம் 6, பத்தினிடத்து இலக்கம் 0, நூறினிடத்து இலக்கம் 4, ஆயிரத்தினிடத்து இலக்கம் 8 ஆகவுள்ள எண் யாது?


4086, 6804, 8406, 8604 : .....

19. கீழே உருவில் காட்டப்பட்டுள்ள மரத்துண்டின் நீளம் எவ்வளவு?



: .....cm

20. கீழே தரப்பட்டுள்ள உருவில் எத்தனை சமச்சீர்க் கோடுகளை வரையலாம்?



: .....

21. ஒரு வாரத்தின் ஐந்து நாட்களில் கல்விக் கண்காட்சி ஒன்றின் விற்பனையாகிய நுழைவுச் சீட்டுகள் பற்றிய தகவல்கள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

நாள்	விற்பனையாகிய நுழைவுச் சீட்டுகளின் எண்ணிக்கை
திங்கட்கிழமை	3375
செவ்வாய்க்கிழமை	4280
புதன்கிழமை	5192
வியாழக்கிழமை	2090
வெள்ளிக்கிழமை	1565


(i) திங்கள், செவ்வாய் ஆகிய நாட்களில் விற்பனையாகிய நுழைவுச் சீட்டுகளின் மொத்த எண்ணிக்கை எத்தனை?

: .....

(ii) வெள்ளிக்கிழமையைவிட புதன்கிழமை எத்தனை நுழைவுச் சீட்டுகள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டுள்ளன?

: .....

22. ஒரு வீட்டையும் அதன் சுற்றாடலையும் காட்டும் படம் கீழே தரப்பட்டுள்ளது.



(i) வீட்டிற்கு மேற்குத் திசையில் உள்ளது எது? : .....

(ii) பலாமரத்திற்கு தென்கிழக்குத் திசையில் எவை உள்ளன? : .....

[பக். 5 ஐப் பார்க்க

www.lkedu.lk

23. ஒரு வயலில் மு.ப. 8.45 இற்குத் தொடங்கிய நெல் அறுவடை பி.ப. 4.30 இற்கு முடிவடைந்தது. நெல் அறுவடைக்காகச் செலவிடப்பட்ட நேரம் எவ்வளவு?

: ..... மணி ..... நிமிடங்கள்

24. 4 லீற்றர் 380 மில்லிலீற்றர் நிறப் பூச்சினை நான்கு பாத்திரங்களில் சமமாக இடும்போது ஒரு பாத்திரத்தில் அடங்கும் நிறப் பூச்சின் அளவு யாது?

: .....l .....ml

25. ஒரு மாம்பழம் 15 ரூபாய் ஆகும். அத்தகைய 10 மாம்பழங்களுக்காகச் செலவிடப்படும் பணம் 5 நண்பர்களுக்கிடையே சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுமெனின், ஒரு நண்பன் செலவிட்ட பணம் எவ்வளவு?

ரூபாய் : .....

26. ஒரு மாலையைச் செய்வதற்கு 79 பவளங்கள் தேவை. அத்தகைய 8 மாலைகளைச் செய்வதற்குத் தேவையான பவளங்களின் எண்ணிக்கை எத்தனை?

: .....

27. உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக.




: .....

28. நகர் A இற்கும் நகர் B இற்கும் இடையே உள்ள தூரம் 15 km ஆகும். நகர் C இற்கும் நகர் D இற்கும் இடையே உள்ள் தூரம் அத்தூரத்தின் ஏழு மடங்காகும். நகர் C இற்கும் D இற்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?

: ..... km

29.



ஒரு நாற்று மேடையில் உள்ள சில நாற்று வகைகள் பற்றிய தகவல்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

(i) நாற்று மேடையில் உள்ள கத்தரி நாற்றுகளின் எண்ணிக்கை எலுமிச்சை நாற்றுகளின் எண்ணிக்கையை விட எவ்வளவு கூடுதலானது?

: .....

(ii) நாற்று மேடையில் உள்ள மொத்த நாற்றுகளின் தொகை எவ்வளவு?

: .....

● இலக்கம் **30** தொடக்கம் **59** வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. "எனது உள அமைதியை எனது வீட்டாருக்கும் என்னால் பகிர்ந்தளிக்க முடியும். ஒரு நல்ல பிள்ளையாக இருக்க என்னால் முடியும். எல்லாவற்றிலும் என்னால் வெற்றி பெற முடியும்." இந்த எண்ணம் உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாடுகளில் எந்தப் படிமுறைக்கு உரியது?

(1) உள்ளத்தை தளர்த்துதல் (2) மனவுறுதி

(3) பிரார்த்தனை (4) மலர்வு

31. ஐப்பசி மாதம் பூப்பூக்கும் தாவரம் எது?

(1) அன்னமுன்னா (2) இலுப்பை (3) வாகை (4) பாலை

32. குப்பைகளை பசளையாக மாற்றித் தரும் பிராணி எது?

(1) நத்தை (2) மண்புழு (3) எறும்பு (4) கரப்பான் பூச்சி

[பக். 6 ஐப் பார்க்க

www.ikedu.lk

33. நிலத்தில் வளரும் தாவரமொன்று நீரையும் பசளையையும் பெறுவது எதனால்?

(1) இலைகளினால் (2) பூக்களினால்

(3) வேர்களினால் (4) வித்துக்களினால்

34. மென்மையான தண்டைக் கொண்ட தாவரம் எது?

(1) மா (2) பலா (3) வாழை (4) வேம்பு

35. அசுத்தமான உணவு, நீர் ஆகியவற்றை உட்கொள்ளுவதால் ஏற்படும் நோய் எது?

(1) ஆனைக்கால் நோய் (2) சீதபேதி

(3) நீரிழிவு (4) கொப்பளிப்பான்

36. இலங்கையின் அரச இலச்சினையில் 'நாட்டையும் கட்டுப்பாடான மக்களையும்' குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடு எது?

(1) நெற்கதிர்கள் (2) தர்ம சக்கரம்

(3) வாளேந்திய சிங்கம் (4) சூரியனும் சந்திரனும்

37. இலையுண்ணும் பிராணிகள் மாத்திரம் அடங்கியுள்ள தொகுதி எது?

(1) சிங்கம், நரி, புலி (2) காகம், நாய், கோழி

(3) மாடு, கோழி, கரடி (4) ஆடு, முயல், மான்

38. சுவர் மேற்பரப்பில் ஒட்டியிருப்பதற்கு விசேட பாதங்கள் இருக்கும் பிராணி

(1) பூனை (2) பல்லி (3) எலி (4) ஓணான்

39. பின்வருவனவற்றுள் எது பாதுகாப்பான சந்தர்ப்பமாகும்?

(1) வெள்ளம் ஏற்பட்டுள்ளபோது வெள்ள நீரில் நீராடச் செல்லல்

(2) மின்னல் மின்னும் வேளைகளில் திறந்த வெளியில் சஞ்சரித்தல்

(3) புகையிரதம் வருவது தெரிந்தும் தண்டவாளத்தைக் கடத்தல்

(4) பாதையின் வலது புறத்தின் வழியே நடந்து செல்லல்

40. தாழ்நிலங்களை நிரப்புதல், மண் அகழ்தல் போன்ற மனிதச் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் இயற்கை அனர்த்தம் எது?

(1) வறட்சி (2) புயல் (3) வெள்ளம் (4) சுனாமி

41. பொதியிடப்பட்ட பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயம் அல்லாதது எது?

(1) காலவதியாகும் திகதி (2) தரச் சின்னம் (SLS / ISO)

(3) பொருளின் தரம் (4) கொள்வனவு செய்யும் கடை

42. "வானத்தில் இருந்து விழும் ஒவ்வொரு மழைத்துளியையும் வீணாக்காது பயன்பெற வேண்டும்." என்னும் கூற்றினைக் கூறிய மன்னன்

(1) தாதுசேனன் (2) மகாசேனன் (3) பராக்கிரமபாகு (4) தேவநம்பியதீசன்

43. பூவில் விரைவில் வாடிப்போவது எந்தப் பகுதி?

(1) இதழ் (2) புல்லி (3) கேசரம் (4) தம்பம்

[பக். 7 ஐப் பார்க்க

www.ikedu.lk

44. பின்வருவனவற்றில் பனிக்கட்டியொன்றை நீரில் இட்டால் நிகழாதது எது?

(1) பனிக்கட்டி நீரில் கரைதல்
(2) பனிக்கட்டி நீரில் மிதத்தல்
(3) நீரின் நிறம் மாற்றமடைதல்
(4) நீர் குளிர்ச்சியடைதல்

45. உணவை நீண்ட காலம் பேணுவதற்குப் பயன்படுத்தப்படும் நவீன முறை பின்வருவனவற்றுள் எது?

(1) மணலினுள் புதைத்தல்
(2) தேனிலிட்டு வைத்தல்
(3) புகையூட்டல்
(4) குளிரூட்டியில் வைத்தல்

46. வீட்டிலுள்ள எல்லோரும் பொதுவில் பயன்படுத்தும் ஒரு பொருள் எது?

(1) துவாய் (2) பற்தூரிகை (3) குடை (4) சவர்க்காரம்

47. படத்தில் காட்டப்பட்டுள்ள குறியீட்டினால் கூறப்படும் தகவல் யாது?



(1) கவனமாகக் கையாள்க
(2) உயரத்தில் வைக்குக
(3) நொருங்கக் கூடியது
(4) இப்பக்கம் மேலே

48. வகுப்பறையில் குழுவேலைகளைச் செய்யும்போது மாணவரிடம் இருக்க வேண்டிய ஒரு நல்ல பண்பு எது?

(1) ஏனையோரைவிட முன்பாகத் தமது வேலையை முடித்தல்
(2) இறுதி வரையில் வேலையில் ஈடுபடுதல்
(3) தமது கருத்துக்களின்படி மாத்திரம் வேலை செய்தல்
(4) தமது வேலையில் மாத்திரம் கவனஞ் செலுத்துதல்

49. மரச்செதுக்கல் வேலைப்பாடுகளுக்குப் பிரசித்தமான இடம் எது?

(1) இசுறுமுனிய (2) சிகிரியா (3) யாப்பகுவ (4) அம்பக்கை

50. காதுகளின் மூலம் மாத்திரம் தகவல்களைப் பெறக்கூடிய இரண்டு தொடர்பாடல் ஊடகங்கள் எவை?

(1) பத்திரிகை, ஒலிபெருக்கி
(2) தொலைக்காட்சி, வானொலி
(3) வானொலி, ஒலிபெருக்கி
(4) பத்திரிகை, தொலைக்காட்சி


51. பின்வரும் விளையாட்டுக்களில் உடற்சக்தி அதிக அளவில் விரயமாகும் விளையாட்டு எது?

(1) தாம் இழுத்தல் (2) கயிறிழுத்தல் (3) சோகி போடுதல் (4) கரம் அடித்தல்

52. காபோவைதரேற்று அடங்கியுள்ள ஓர் உணவுப் பொருள் எது?

(1) கரட் (2) ஈரப்பலா (3) முருங்கை இலை (4) பப்பாசி

53.



படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம் பின்வரும் எதனைச் செய்வதற்கு மிகப் பொருத்தமானது?

(1) இரும்பு ஆணி அறைவதற்கு
(2) கருங்கல் உடைப்பதற்கு
(3) போத்தல் மூடி திறப்பதற்கு
(4) திருகு ஆணி கழற்றுவதற்கு

[பக். 8 ஐப் பார்க்க

54. பின்வருவனவற்றுள் இலங்கையின் கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று

(1) கரப்பந்து (2) பல்லாங்குழி (3) வலைப்பந்து (4) கிறிக்கெற்

55. 

எமது நாட்டின் நற்பெயரைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்த உருவில் உள்ளவர்

(1) திரு சு. டபிள்யு. பெரேரா

(2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

(3) பண்டிதர் டபிள்யு. டீ. அமரதேவ

(4) கலாநிதி சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா

56. தேசியக் கொடியில் உள்ள நிறங்களில் அடங்காதது எது?

(1) சிவப்பு (2) பச்சை (3) நீலம் (4) செம்மஞ்சள்

57. மகாசேனன், தாதுசேனன் ஆகியோர் கட்டுவித்த குளங்கள் முறையே யாவை?

(1) திசாவாவி, கலாவாவி (2) கலாவாவி, திசாவாவி

(3) பசவக் குளம், மின்னேரியாக் குளம் (4) மின்னேரியாக் குளம், கலாவாவி

58. 'வெசாக் கூடு' எந்த சமயத்துக்குரிய அலங்கரிப்பாகும்?

(1) கிறிஸ்தவம் (2) பௌத்தம் (3) இஸ்லாம் (4) இந்து

59. இலங்கையின் தேசியப் பறவையைக் காட்டும் உருவைத் தெரிவுசெய்க.



(1) (2) (3) (4)

60. "நான் ஓர் எறும்பானால்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....


.....

***

www.ikedu.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்



EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2020

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2020

வினாத்தாள் இல. 2

வினாத்தாள் I

45 நிமிடம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்


WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...


● **1, 2** ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க.

1.



(1) (2) (3)


2.



(1) (2) (3)


● **3, 4** ஆகிய வினாக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்தும் வேறுபடுகின்றது. வேறுபடும் உருவைத் தெரிவுசெய்க.

3.



(1) (2) (3)

4.



(1) (2) (3)

● **5, 6** ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவ்விரு கூட்டங்களையும் சேராதது எது?

5. சைக்கிள், கப்பல், பேருந்து, விமானம், தொடருந்து, தோணி

(1) கப்பல் (2) விமானம் (3) தொடருந்து


6. மண்வெட்டி, தூண்டில், சுத்தியல், கைமுள்ளு, அத்தாங்கு, குப்பைவாரி

(1) சுத்தியல் (2) அத்தாங்கு (3) குப்பைவாரி


www.lkedu.lk



சுட்டெண் :.....

● 7, 8 ஆகிய வினாக்களில் வெறுமையாயுள்ள அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.

7. 

(1)  (2)  (3) 

8. 

(1)  (2)  (3) 

9. பாடசாலையில் குமரன் நடந்து செல்லும்போது ஒரு மாணவனை இடித்துக் கீழே தள்ளி விட்டான். குமரன் செய்ய வேண்டியது யாது?

(1) கீழே விழுந்த மாணவனை தூக்கி விட்டு மன்னிப்பு கேட்டல்

(2) கீழே விழுந்த மாணவனை ஏசுதல்

(3) கீழே விழுந்த மாணவனைக் கவனிக்காமல் செல்லல்

10. உள்ளங்கை நெல்லிக்கனி போல என்பதன் கருத்தை விளக்கும் கூற்று யாது?

(1) இலகுவாக மனதில் பதிதல்

(2) காத்திருந்து ஏமாற்றம் அடைதல்

(3) மிகத் தெளிவாகத் தெரிதல்

11. அரசின் வெகுமதியாய் நூலிதனைப் பெற்றேன்
அறிவு பெருகிடவே நூலிதனைக் கற்பேன்
தாய் நாட்டின் வளமென நூலிதனைக் காப்பேன்
பல மாணவரும் பயின்றிடவே நூலிதையே அளிப்பேன்

இக்கவிதை தரும் முழுமையான கருத்தாவது

(1) இலவசப் பாடநூல்களை அரசின் பரிசாய்ப் பெற வேண்டும்.

(2) இலவசப் பாடநூல்களை அறிவை அதிகரிக்கக் கற்க வேண்டும்.

(3) இலவசப் பாடநூல்களை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

12. வெள்ளத்தாலும் போகாது, வெண்தணலாலும் வேகாது,
கொள்ளையடிக்கவும் முடியாது. கொடுத்தாலும் குறையாது.
இதில் குறிப்பிடப்படுவது

(1) கல்வி பற்றி (2) செல்வம் பற்றி (3) சொத்து பற்றி

13. 2✻3 = 1❋5 என்னும் கணிதத் தொடர்புடைமையில் ✻, ❋ என்னும் குறியீடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள இரு கணிதச் செய்கைகளும் யாவை?

(1) + உம் X உம் (2) X உம் ÷ உம் (3) ÷ உம் − உம்

www.lkedu.lk


14. பின்வரும் வரிப்படத்திற்கு ஏற்ப இரு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான இரு உருக்களும் இடம்பெறும் விடையைத் தெரிவுசெய்க.

B → ᗷ எனின் K → .....

D → ᗡ எனின் F → .....

(1) K உம் F உம் (2) ꓘ உம் ꟻ உம் (3) ꓘ உம் ⅃ உம்

15. இவ்வுருவுடன் தொடர்புபட்ட சரியான கூற்றைத் தெரிவுசெய்க.




(1) பகுதி A ஆனது சிவப்பு, நீலம், மஞ்சள் என்னும் மூன்று நிறங்களுக்கும் உரியது.

(2) B, C ஆகிய பகுதிகள் மஞ்சள் நிறமுள்ளவை.


(3) பகுதி C நீலநிறமாக இருக்கும் அதேவேளை பகுதி D சிவப்பு நிறமானது.

16. பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவுசெய்க.



(1) 31 (2) 33 (3) 36

17. ஒரு முக்கோணத் தாளை எடுத்து உரு A இல் காட்டப்பட்டுள்ளவாறு நடுவில் முறிந்த கோடு வழியே இரண்டாக மடித்து உரு B இல் காட்டப்பட்டுள்ளவாறு முறிந்த கோடு வழியே வெட்டி அத்தாள் துண்டுகளாக்கப்பட்டுள்ளன.



உரு A உரு B

கிடைக்கும் துண்டுகள் பற்றிய சரியான கூற்று யாது ?

(1) மூன்று முக்கோணத் துண்டுகள்


(2) ஒரு சதுரத் துண்டும் இரு முக்கோணத் துண்டுகளும்

(3) ஒரு நாற்பக்கல் துண்டும் இரு முக்கோணத் துண்டுகளும்

www.ikedu.lk


● **18, 19** ஆகிய வினாக்களில் இருக்கும் கோலத்திற்கேற்ப அடுத்ததாக வர வேண்டிய உருவைத் தெரிவுசெய்க.

18.



(1) (2) (3)

19.



(1) (2) (3)

20. 3 மீற்றர் அகலமும் 4 மீற்றர் உயரமும் உள்ள சுவருக்குப் பூசுவதற்கு 3 லீற்றர் தீந்தை தேவைப்படுகின்றது. 4 மீற்றர் அகலமும் 5 மீற்றர் உயரமும் உள்ள சுவருக்குப் பூசுவதற்கு எத்தனை லீற்றர் தீந்தை தேவைப்படும்?

(1) 4 (2) 5 (3) 6

21. ஒரு பேருந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை அதில் உள்ள பெண் பயணிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். அடுத்த தரிப்பிடத்தில் 4 பெண்கள் பேருந்தில் ஏறிய பின்னர் ஆண்களின் எண்ணிக்கையும் பெண்களின் எண்ணிக்கையும் சமம். இப்போது பேருந்தில் இருக்கும் ஆண்களின் எண்ணிக்கையும் பெண்களின் எண்ணிக்கையும் யாவை?

(1) ஆண்கள் 4, பெண்கள் 4

(2) ஆண்கள் 5, பெண்கள் 5

(3) ஆண்கள் 6, பெண்கள் 6

22. நிமலன் பிறக்கும்போது அவனுடைய தாயாரின் வயது 25 ஆகும். நிமலனின் தம்பி பிறக்கும்போது தாயாரின் வயது 29 ஆகும். நிமலனின் தற்போதைய வயது 10 எனின், அவனுடைய தம்பியின் தற்போதைய வயது யாது?

(1) 4 (2) 5 (3) 6


23. என்னிடம் சில பேனைகள் உள்ளன. அவற்றுள் இரண்டைத் தவிர்த்து எஞ்சியவை சிவப்பு நிறம். இரண்டைத் தவிர்த்து எஞ்சியவை கறுப்பு நிறம். இரண்டைத் தவிர்த்து எஞ்சியவை நீல நிறம். என்னிடம் உள்ள பேனைகளின் எண்ணிக்கை யாது?


(1) 3 (2) 4 (3) 6

[பக். 6 ஐப் பார்க்க

www.ikeduk.lk

24. பின்வரும் உருவை முகம் பார்க்கும் கண்ணாடியை நோக்கித் திருப்பி அக்கண்ணாடியினூடாகப் பார்க்கும் போது அவ்வுரு காணப்படத்தக்க விதத்தைத் தெரிவுசெய்க.





(1)




(2)




(3)

● **25, 26** ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை அம்புக்குறி காட்டும் திசையிலிருந்து பார்க்கும்போது தோற்றும் விதத்தைத் தெரிவுசெய்க.

25.






(1)





(2)



(3)

26.






(1)



(2)





(3)

27. 30 நாட்களைக் கொண்ட ஒரு மாதத்தில் வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை ஆகிய நாட்கள் ஐந்து வீதம் உள்ளன. அம்மாதத்தின் **20** ஆந் திகதி என்ன நாளாகும்?


(1) செவ்வாய்க்கிழமை (2) புதன்கிழமை (3) வியாழக்கிழமை

28. பின்வரும் உருவில் உள்ள எல்லா நிரைகளிலும் நிரல்களிலும் 1, 2, 3, 4, 5 என்னும் இலக்கங்கள் ஐந்தும் இருத்தல் வேண்டும். இதற்கேற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க.






(1)



(2)



(3)

29. ஒரு கொய்யாப்பழத்தின் விலை ரூ. 20 ஆகும். ஓர் அன்னாசிப்பழத்தின் விலை ரூ. 85 ஆகும். கொய்யாப்பழம், அன்னாசிப்பழம் ஆகியவற்றில் ஒரு குறித்த எண்ணிக்கையை வாங்குவதற்கு ரேவதி செலவிட்ட பணம் ரூ. 250 ஆகும். ரேவதி வாங்கிய கொய்யாப்பழங்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 2 (2) 3 (3) 4


www.lkedu.lk

30. கதிரை, மேசை, தளபாடங்கள் என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்கு வரையப்பட்டுள்ள உருவைத் தெரிவுசெய்க.



(1) (2) (3)

31. ஒரு பழக்கடையில் குறித்த ஒரு நாளில் விற்கப்பட்ட பழங்கள் பற்றிய தகவல்கள் இவ்வரைபில் காட்டப்பட்டுள்ளன. அந்நாளில் விற்கப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கை பின்வரும் எவ்விரு பழங்களின் எண்ணிக்கைகளின் கூட்டுத்தொகைக்குச் சமம்?



(1) அப்பிள்பழங்களும் கொய்யாப்பழங்களும்

(2) தோடம்பழங்களும் அப்பிள்பழங்களும்

(3) கொய்யாப்பழங்களும் தோடம்பழங்களும்


32. ஒரு பரீட்சையில் கீதா இந்திரனைவிட கூடிய புள்ளிகளைப் பெற்றாள். முரளியைவிட கீதா குறைந்த புள்ளிகளைப் பெற்றாள். எனின்,

(1) மிகக் கூடிய புள்ளிகளைக் கீதா பெற்றுள்ளாள்.

(2) முரளியும் கீதாவும் சம புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

(3) இந்திரனிலும் முரளி கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளான்.

33.



இவ்வுருவில் காணத்தக்க சதுரங்களின் எண்ணிக்கை யாது?

(1) 9 (2) 12 (3) 14

34. ஒரு நகரத்தில் பேருந்துத் தரிப்பிடம் மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து 50 மீற்றர் கிழக்கேயும் பொலிஸ் நிலையம் மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து 70 மீற்றர் தெற்கேயும் பாடசாலை பொலிஸ் நிலையத்திலிருந்து 50 மீற்றர் கிழக்கேயும் உள்ளன. இதற்கேற்ப பேருந்துத் தரிப்பிடம் இருப்பது பாடசாலையிலிருந்து

(1) 60 மீற்றர் தெற்கே

(2) 70 மீற்றர் வடக்கே

(3) 70 மீற்றர் கிழக்கே

35. 120 மாம்பழங்களைக் கொண்ட மாம்பழக் குவியலில் $\frac{2}{8}$ பழுதடைந்ததன் காரணமாக அகற்றப்பட்டது. மீதியாக இருந்த நல்ல மாம்பழங்கள் மூன்று நண்பர்களிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஒரு நண்பனுக்குக் கிடைத்த மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?


(1) 20 (2) 25 (3) 30

[பக். 8 ஐப் பார்க்க


www.lkedu

36. பின்வரும் உருவில் அட்டைத்தாளினால் செய்யப்பட்ட ஒரு பெட்டி உள்ளது. அது விரிக்கப்படும்போது தோற்றும் விதம் யாது?






(1)



(2)



(3)

37. கொழும்பிலிருந்து புத்தளத்திற்குச் சென்ற ஒரு பேருந்து சில நகரங்களைக் கடந்து சென்ற விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

"அது சிலாபம் நகரத்தைக் கடந்து செல்வதற்கு முன்னர் மஹாவெவ நகரத்தைக் கடந்தது. அது சிலாபம் நகரத்தைக் கடந்து சென்ற பின்னர் மங்களஎலிய நகரத்தைக் கடந்து சென்றது."

பேருந்து புத்தளத்திலிருந்து கொழும்புக்கு அதே பாதையில் திரும்பி வரும்போது அந்நகரங்களைக் கடக்கும் ஒழுங்குமுறை யாது ?

(1) சிலாபம், மங்களஎலிய, மஹாவெவ

(2) மங்களஎலிய, சிலாபம், மஹாவெவ

(3) மஹாவெவ, சிலாபம், மங்களஎலிய


38. "எனக்கு ஓர் அண்ணனும் ஓர் அக்காவும் மாத்திரம் உள்ளனர். எமது அப்பாவுக்கு ஒரு மகனும் இரு மகள்மாரும் உள்ளனர்." என்று ஒரு பிள்ளை கூறுகின்றது. இதற்கேற்ப இப்பிள்ளை அக்குடும்பத்தில்

(1) மூத்த மகள் ஆவாள்.

(2) இளைய மகள் ஆவாள்.

(3) இளைய மகன் ஆவான்.

● பின்வரும் வரிப்படம் ஒரு தோட்டத்திலுள்ள மரங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகின்றது. இதனைக் கொண்டு **39, 40** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



39. தோட்டத்திலுள்ள பலா மரங்களின் எண்ணிக்கை 20 ஆகும். இதற்கேற்ப தோட்டத்திலுள்ள மரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 120 (2) 160 (3) 200

40. தோட்டத்திலுள்ள எந்த இரண்டு மரங்களின் எண்ணிக்கையைச் சேர்க்கும்போது கொய்யா மரங்களின் எண்ணிக்கைக்குச் சமனாகும்?

(1) வாழை, மா (2) பலா, வாழை (3) தென்னை, மா

* * *

www.ikedu.lk

[பிரதி © பதிப்புரிமையுடையது
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்



EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2020

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2020

வினாத்தாள் இல. 2

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் :.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்து பார்ப்பதற்காகத் தாளொன்று வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பிட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.ikeou.lk

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

உலகளாவிய ரீதியில் இன்று பிளாஸ்டிக், பொலித்தீன் பாவனை அதிகரித்துள்ளது. இதன் பாவனையால் நாம் வாழும் சூழல் மாசடைகிறது. மண் வளம் குன்றுகிறது. மழைநீர் தேங்கி நுளம்பு உற்பத்திக்குக் காரணமகின்றது. வீசப்படும் பிளாஸ்டிக், பொலித்தீன்களை விலங்குகள் உட்கொள்வதால் அவை இறக்கின்றன. பாவனையிலிருந்து நீக்கிய பிளாஸ்டிக், பொலித்தீன் பொருள்களை எரிக்கும்போது வளி மாசடைகின்றது. இவற்றின் பாவனைக்குப் பதிலாக இயற்கையோடு இணைந்த பொருள்களான வாழை இலை, ஓலைகள், கமுக மடல், மட்பாண்டங்கள் போன்றவற்றை எமது அன்றாட வாழ்வில் பயன்படுத்தப் பழகவேண்டும்.

● பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனைக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் மாற்றுப் பொருள் ஒன்றினை எழுதுக.

.....

(ii) பொலித்தீன் பாவனையால் ஏற்படும் **இரண்டு** தீமைகளை எழுதுக.

(1) .....

(2) .....

(iii) 'சுற்றாடல்' என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.

.....

(iv) தன்மைப் பன்மைச் சொல் ஒன்றை எழுதுக. .....

(v) இப்பந்திக்கு மிகவும் பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையின் தீமைகள்

(2) பொலித்தீன், பிளாஸ்டிக் பொருள்களுக்கான மாற்றுப் பொருள்கள்

(3) பொலித்தீன், பிளாஸ்டிக் பொருள்களை அழிக்கும் முறைகள்

2. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

(i) வாகை சூடுதல் : .....

(ii) நட்டாற்றில் விடல் : .....

3. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

(i) நேத்திரம் என்பதன் பொருள் யாது

(ii) ஆகா இது எவ்வளவு பெரிய நீர்வீழ்ச்சி

4. "வட்ட நிலா பிரகாசமாகக் காட்சியளித்தது".

இவ்வாக்கியத்தின் எழுவாய் அடைமொழியை எழுதுக. : .....

5. சரியான வினைச்சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) மழை பெய்தபோது பளீர்பளீர் என மின்னல் (மின்னியது / மின்னின)

(ii) பசுக்கள் புற்றரையை நோக்கிச் (செல்கின்றது / செல்கின்றன)

6. பின்வரும் பழமொழியைப் பூர்த்திசெய்க.

கடனில்லாத ..... கால்வயிறு போதும்.

{பக். 3 ஐப் பார்க்க

www.ikedu.lk

கூட்டெண் :.....

7. பின்வரும் ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக எழுதுக.

(i) மரத்தினது வேர் நீரை நாடிச் சென்றது.

.....

(ii) மாலுமி கப்பலைச் செலுத்தினான்.

.....

8. பின்வரும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள சொல்லாக எழுதுக.

(i) க/சா/லா/ர/ம் : .....

(ii) பி/த/ன்/ம்/ன/க்/கை : .....

9. சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக. (வாணூர்தி / வாணூர்தி)

10. ஒரு நூலை வெளியிடுவோர் அந்நூலைப் பற்றிக் கூறும் உரை (முன்னுரை / பதிப்புரை)

11. பின்வரும் இணைமொழியைப் பூர்த்திசெய்க.

கள்ளங்.....

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) blackboard : ..... (ii) rainbow : .....

13. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை, ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

.....

(ii) 

.....

14 பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

(i) cat / my / milk / likes : .....


(ii) are / you / What / doing? : .....

15. (i) 'தும்ரியஸ்தானய' என்னும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

: .....

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

உங்கள் வகுப்பு எது? : .....

16. 

வட்டத்தில் உள்ள நான்கு இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கக்கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக.

: .....

17. தரப்பட்டுள்ள எண்ணை விரித்து எழுதுக.

5134 = ... + ... + ... + ...

www.ikedu.lk

18. தரப்பட்டுள்ள ஒவ்வோர் எண் கோலத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

(i) 17, 25, 33, 41, ...





(ii) 8, 24, 72, ..., 648

19. ரேவதியின் தற்போதைய வயது 9 ஆகும். அவளுடைய அக்காவின் வயது ரேவதியின் வயதின் இரு மடங்காகும். ரேவதியின் பாட்டியின் தற்போதைய வயது ரேவதியின் அக்காவின் தற்போதைய வயதின் நான்கு மடங்காகும்.

(i) ரேவதியின் அக்காவின் தற்போதைய வயது யாது? : .....

(ii) ரேவதியின் பாட்டியின் தற்போதைய வயது யாது? : .....

20. சில உண்டியல்களில் உள்ள பணத்தொகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A	B	C	D	E
				
ரூபாய் 1412	ரூபாய் 595	ரூபாய் 2080	ரூபாய் 1300	ரூபாய் 4360

(i) B உண்டியலில் உள்ள பணத்தொகையை விட A உண்டியலில் எவ்வளவு பணத்தொகை கூடுதலாக உள்ளது?

ரூபாய் : .....

(ii) C, D, E ஆகிய மூன்று உண்டியல்களிலும் உள்ள பணத்தொகைகளின் மொத்தம் எவ்வளவு?

ரூபாய் : .....

21. மு.ப. 6.55 இற்குப் பாடசாலைக்கு வந்த ராதா பாடசாலையிலிருந்து பி.ப. 2.20 இற்கு வீட்டை நோக்கிப் புறப்பட்டாள்.

(i) ராதா பாடசாலையில் செலவிட்ட நேரம் மணித்தியாலங்களிலும் நிமிடங்களிலும் எவ்வளவு?

மணித்தியாலம் : ..... நிமிடம் : .....

(ii) அவள் பாடசாலையிலிருந்து புறப்பட்ட நேரத்தை இருபத்துநான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக.

..... : ..... மணித்தியாலம்


22.  இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக.

: .....

23. பின்வரும் அட்டவணையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

உரோம எண்குறி	இந்து அராபிய எண்குறி
.....	12
XIX	.....

24. கடிகார முகத்தில் காட்டப்பட்டுள்ள நேரம் யாது?




நேரம் : .....

[பக். 5 ஐப் பார்க்க

www.ikeduk

25. தரப்பட்டுள்ள படத்தைக் கொண்டு விடை எழுதுக.



(i) நகர் E இற்கும் நகர் D இற்குமிடையே உள்ள தூரத்திலும் பார்க்க நகர் D இற்கும் நகர் C இற்குமிடையே உள்ள தூரம் எவ்வளவினால் கூடியது?

: ..... km ..... m

(ii) நகர் A இற்கும் நகர் E இற்குமிடையே உள்ள தூரத்திலும் 3 மடங்கான தூரம் எந்நகர்களுக்கு இடையே உள்ளது?

: .....

26. ஒரு கொடிச் சரத்தில் 6 கொடிகள் வீதம் 846 கொடிகளைக் கொண்டு எத்தனை சரங்களைத் தயாரிக்கலாம்?


: .....

27. ஒரு வாகனத்தில் முதலாம் நாள் 4 லீற்றர் 500 மில்லிலீற்றர் எரிபொருளும் இரண்டாம் நாள் 5 லீற்றர் 750 மில்லிலீற்றர் எரிபொருளும் நிரப்பப்பட்டன. இரண்டு தினங்களிலும் வாகனத்தில் நிரப்பப்பட்ட எரிபொருளின் மொத்த அளவு எவ்வளவு?

: ..... l ..... ml

28. சதுர முகங்களை மாத்திரம் கொண்ட திண்மத்தின் பெயரை எழுதுக. : .....

29.



ஒரு மணித்தியாலத்தில் சிற்றுண்டிச்சாலை ஒன்றில் விற்பனை செய்யப்பட்டுள்ள இனிப்புப் பண்டங்களின் விபரம் நிரல் வரைபில் தரப்பட்டுள்ளன.

(i) லட்டின் எண்ணிக்கையை விடக் கூடுதலாக எவ்வளவு தேன்குழல் விற்பனை செய்யப்பட்டுள்ளது?

: .....

(ii) ஒரு மணித்தியாலத்தில் சிற்றுண்டிச்சாலையில் விற்பனை செய்யப்பட்ட மொத்த இனிப்புகளின் தொகை எவ்வளவு?

: .....

● இலக்கம் **30** தொடக்கம் **59** வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. ஒரு குறித்த காலத்தில் மாத்திரம் பூப்பூக்கும் தாவரங்கள் அடங்கியுள்ள விடையைத் தெரிவுசெய்க.

(1) தென்னை, வாழை, செவ்வரத்தை
(2) முருங்கை, இலுப்பை, தென்னை
(3) அன்னமுன்னா, இலுப்பை, முருங்கை
(4) பாலை, செவ்வரத்தை, நாவல்

31. இலங்கைக்கே உரித்தான நகருயிர் விலங்கு எது?

(1) சுண்டெலி
(2) கொம்பு ஒணான்
(3) மள்புளூட்டா
(4) மரநாய்

32. தாவரங்களில் பிரதானமாகப் பின்வரும் எந்தப் பகுதியில் உணவு உற்பத்தி செய்யப்படும்?

(1) பூ
(2) காய்
(3) வேர்
(4) இலை

[பக். 6 ஐப் பார்க்க

www.ikedu.lk

33. பிராணிகளால் தாவரங்களுக்கு ஏற்படும் தீங்கு

(1) பிராணிகளின் மல - சலம் தாவரங்களுக்குப் பசளையாதல்

(2) வித்துக்களைப் பரப்பி தாவரங்கள் பெருக்கமடைய உதவுதல்

(3) பிராணிகள் தாவரப் பகுதிகளை உண்ணுதல்

(4) பூக்களில் மகரந்தச் சேர்க்கை நிகழ்த்துதல்

34. கண் பார்வை குறைவடைதல் எந்த உயிர்ச்சத்து குறைபாட்டால் ஆகும்?

(1) விற்றமின் A (2) விற்றமின் B (3) விற்றமின் C (4) விற்றமின் D

35. சுவரோவியங்களுக்குப் பிரசித்தமான இடம் எது?

(1) இசுறுமுனிய (2) சிகிரியா (3) யாப்பகுவை (4) காலிக்கோட்டை

36. இலங்கைத் தேசியக் கொடியில் செம்மஞ்சள் நிறப்பட்டி குறித்து நிற்பது

(1) முஸ்லிம் மக்களை (2) தமிழ் மக்களை

(3) சிங்கள மக்களை (4) கொடியின் முழுமைப்பாட்டை

37. தண்டில் கிளைகள் இல்லாத மரம் பின்வருவனவற்றுள் எது?

(1) வேம்பு (2) பலா (3) கமுகு (4) தேக்கு

38. பயிர்ச் செய்கைக்கு சாதகமான பிராணிகள் மாத்திரம் அடங்கியுள்ள தொகுதி எது?

(1) வெண்மூட்டைப் பூச்சி, நத்தை, மயிர்க்கொட்டி

(2) தேனீ, தண்டுகோதி, சிற்றுண்ணி

(3) குளவி, ஓணான், வண்ணத்துப்பூச்சி

(4) மண்புழு, வண்ணத்துப்பூச்சி, ஆந்தை

39. துன்ஹிந்த, கலா வாவி ஆகியன முறையே இலங்கையில் உள்ள,

(1) ஓர் ஆறும், ஒரு காடும் ஆகும். (2) ஒரு நீர்வீழ்ச்சியும், ஒரு குளமும் ஆகும்.

(3) ஒரு குளமும், ஒரு மலையும் ஆகும். (4) ஒரு மலையும், ஓர் ஆறும் ஆகும்.

40. மண்ணரிப்பு ஏற்படுவதில் பின்வரும் எச்செயல் செல்வாக்குச் செலுத்துகின்றது?

(1) புல் வளர்த்தல் (2) கல் பரப்புதல்

(3) தாவரங்களை வெட்டுதல் (4) தேங்காய் உரிமட்டை அடுக்குதல்

41. இலங்கையில் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள ஒரு பிரதேசம் எது?

(1) திருகோணமலை (2) கொழும்பு (3) காலி (4) அம்பாந்தோட்டை

42. "ஆனகட்டி ஏலேலப்படி சேர்குழப்பி அயிறு சம்பா ஏலேலப்படி நாத்து நட்டு..." எனும் பாடல்

(1) அரவிவெட்டுப் பாடல் (2) சேனைகாத்தற் பாடல்

(3) வண்டிக்காரன் பாடல் (4) மீனவர் பாடல்

43. தேசப்படமொன்றில் அதிவேகப் பாதையைக் குறித்துக் காட்டுவதற்குப் பயன்படும் நிறம் எது?

(1) சிவப்பு (2) கறுப்பு (3) ஊதா (4) மஞ்சள்

44. மலைப்பகுதிகளில் உள்ள மண்ணை வெட்டி அப்புறப்படுத்துவதால் ஏற்படத்தக்கது

(1) வறட்சி (2) மண்சரிவு (3) புயல் (4) மின்னல்

www.lkedu.lk

45. கத்தரிக்கோல், சுத்தியல் ஆகியவற்றினால் செய்யப்படும் வேலைகள் முறையே யாவை?

(1) போத்தல் மூடி திறத்தல், ஆணி கழற்றுதல்

(2) பொருள்களைத் துண்டுகளாக்குதல், துணிகளை வெட்டல்

(3) ஆணி கழற்றுதல், போத்தல் மூடி திறத்தல்

(4) துணிகளை வெட்டல், ஆணி கழற்றுதல்

46. "மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கண்ணாடி" என்பதை உணர்த்தும் குறியீடு எது?



(1)



(2)



(3)



(4)

47. அச்சு வழித் தகவல் தொடர்பு சாதனம் பின்வருவனவற்றுள் எது?

(1) புத்தகம் (2) வானொலி (3) தொலைக்காட்சி (4) மின்னஞ்சல்

48. தலைக்கவசம், கையுறை, காற்காப்பு என்பன அணிந்து விளையாடப்படும் விளையாட்டு

(1) காற்பந்து (2) கரப்பந்து (3) எல்லே (4) கிரிக்கெற்

49. உடல், உளச் சுகத்திற்கான செயற்பாடுகளில் 'திடசித்தம்' எத்தனையாவது படிமுறைக்கு உரியது?

(1) இரண்டாம் (2) மூன்றாம் (3) நான்காம் (4) ஐந்தாம்

50. உடல் வளர்ச்சிக்கு உதவும் போசணைக்கூறு எது?

(1) கொழுப்பு (2) புரதம் (3) கல்சியம் (4) காபோவைதரேற்று

51. சூரியக் குடும்பத்தில் மிகவும் வெப்பமான கோள் எது?

(1) செவ்வாய் (2) புதன் (3) வியாழன் (4) வெள்ளி

52. வீட்டுத்தோட்டத்தில் நாற்றுமேடை ஒன்றைத் தயார்செய்வதற்குப் பொருத்தமான இடம் எது?


(1) சூரிய ஒளி குறைவாகக் கிடைக்கின்ற பாரிய மரங்கள் உள்ள தரை

(2) கற்களைக் கொண்ட நீர் வடிந்தோடும் சம தரை

(3) சூரிய ஒளி நன்கு கிடைக்கும் நீர் வழிந்தோடும் கற்கள் அற்ற சம தரை

(4) சூரிய ஒளி குறைவாகக் கிடைக்கின்ற பாரிய மரங்களும் கற்களும் உள்ள தரை

53.



படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம் பின்வரும் எதனைச் செய்வதற்கு மிகப் பொருத்தமானது?

(1) பலகையைத் துளைப்பதற்கு (2) பலகையை அறுப்பதற்கு

(3) பலகையைச் செதுக்குவதற்கு (4) பலகையைச் சீவுவதற்கு

54. கைக்குட்டையில் பூவைத் தைக்கும்போது பூவின் காம்பைத் தைப்பதற்கு மிக உகந்த தையல் முறை எது?


(1) நரம்புத் தையல் (2) கம்பளித் தையல்

(3) சங்கிலித் தையல் (4) வெட்டுக்குத்துத் தையல்


[பக். 8 ஐப் பார்க்க

www.keou.lk


55. பின்வரும் ஒழுங்கமைப்பில் உள்ள எந்த மின்குமிழ் ஒளிராது?




(1)



(2)



(3)



(4)

56. உயரத்திலிருந்து விழுந்து விலா எலும்பு உடைந்த ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய முதலுதவி

(1) உடலில் விபத்துக்கு உட்பட்ட இடத்தை துணியினால் கட்டுதல்

